# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

SECOND SEMESTER – **NOVEMBER 2016**

**TL 2502/TL 2501 – RELIGIOUS AND ETHICAL LITERATURE**

Date: 12-11-2016 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00-04:00

**பகுதி-அ** ( 10X2=20 மதிப்பெண்கள்)

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. திருநாவுக்கரசர், 'அவர்செல்வம் மதிப்போமல்லோம்' என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
02. இராமலிங்க வள்ளலார் களிப்பே, கண்ணே என்று கூறக் காரணம் என்ன?
03. குலசேகரர், 'செண்பகமாய் நிற்கும் திருவுடையவன் ஆவேனே!' என எதற்காக முறையிடுகிறார்?
04. எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை, தன் மனம் எவ்வாறு உழலுவதாகக் கூறுகின்றார்?
05. 'யாரெல்லாம் பகைசெய்வர்', எனத் தேம்பாவணி குறிப்பிடுகின்றது?
06. குணங்குடி மஸ்தான் - இயற்பெயர் கூறுக.
07. 'உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு' - விளக்கம் தருக.
08. 'கல்மேல் எழுத்துப்போற்காணுமே' - எது?
09. பாரதியின் புதிய ஆத்திசூடியிலிருந்து இரண்டனைக் குறிப்பிடுக.
10. வரம் தரு காதையில் இடம்பெறும் மூன்று நிலையில்லாமைகள் யாவை?

**பகுதி-ஆ** ( 5X7=35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. சுந்தரர், அடியார்க்கு அடியேன் எனக் கூறுவனவற்றைக் கூறுக.
12. 'ஐயன் எனக்கருளியவாறார் பெறுவார் அச்சோவே!' - விளக்குக.
13. திருமலையில் யாதேனும் ஒரு பிறப்பை குலசேகரர் எங்ஙனம் வேண்டுகிறார்?
14. இத்தாலிய நாட்டின் சிறப்புகளாகத் தேம்பாவணி கூறுவன யாவை?
15. கூடா நட்பு, குறித்து வள்ளுவர் உணர்த்துவன யாவை?
16. புதிய ஆத்திசூடியில் இடம்பெறும் நற்கருத்துகளைத் தெளிவுறுத்துக.
17. சிலப்பதிகாரம் கூறும் அறங்களை எழுதுக.

**பகுதி-இ** ( 3X15=45 மதிப்பெண்கள்)

**மூன்றுபக்க அளவில் கட்டுரை வரைக.**

18. வள்ளலார் உணர்த்தும் இறையருளை திருவருட்பா வழி விளக்குக.

**( அல்லது )**

குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டு அம்மானிடம் முறையிடுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

19. எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை, கையடைப்பதிகத்தின் வழி இறைவனிடம், அடைக்கலம் அருளுமாறு வேண்டுவன யாவை?

**( அல்லது )**

இறைவனைக் காணாமல் குணங்குடியார் வருந்துமாற்றைப் பராபரக்கண்ணி வழிப் புலப்படுத்துக.

20. திருவள்ளுவர் கூறும் நீதிகளை, அறன் வலியிறுத்தல், இனியவை கூறல் அதிகாரங்கள் வழித் தொகுத்துரைக்க.

**( அல்லது )**

ஔவையார் பாடல்களின் வழி அறியலாகும் வாழ்வியல் கருத்துகளை விளக்கி வரைக.

---